# <u>சாதாரணக்கூட்டம்</u>

2022–ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.மோ.செல்வராஜ்,**
**தலைவர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**<u>பொருள் எண்.1</u>**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர் திரு.செ.கோபிநாத் அவர்களின் ஆகஸ்ட் 2022–ம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.191 நாள். 30.08.2022**

பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்.2</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பொதசுகதார பிரிவில் பொது சுகாதாரப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட வாகனங்களுக்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது. நடப்பு 2022 ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்த வேண்டி நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வாகனம் வாரியாக.

| வ.எண் | வாகனத்தின் பதிவு எண் | வாகனத்தின் பெயர் | இன்சூரன்ஸ் தொகை ரூ.பை |
|---|---|---|---|
| 1 | TN 34 AY 0875 | TATA ACE | 20208 /– |

| | | | |
|---|---|---|---|
| 2 | TN 34 R 4132 | கழிவுநீர் ஊறிஞ்சும் வாகனம் | 33907 /– |
| 3 | TN 34 R 7644 | டிப்பர் லாரி | 33137 /– |

மேற்கண்ட வாகனங்களுக்கான இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.87252/– ஐ நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழுங்கலாம்.
2. பொதுசுகாதார வாகனங்களுக்கு நடப்பு – 2022 ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்த வேண்டி வரப்பெற்ற பட்டியல் தொகையான ரூ.87252/– ஐ, பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து தொகை செலுத்தப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1337/2022/எச்1

**தீர்மான எண்.192 நாள். 30.08.2022**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

தற்பொழுது கர்நாடகா மாநிலத்தில் பெய்த கனமழையின் காரணமாக மேட்டூர் அணையின் முழு கொள்ளவும் நிரம்பி, உபரி நீர் அனைத்தும் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது, இதனால் இந்நகராட்சியில் காவிரி கரையோர பகுதிகளில் வெள்ள நீர் புகுந்தும், பொதுமக்கள் தங்கள் உடமைகளுடன் வெள்ள நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே தண்ணீர் புகுந்த பகுதிகள் மற்றும் முகாம்களில் தங்கவைக்கப்பட்ட பகுதிகளில் நோய் தொற்று பாதிப்பு ஏதும் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி பவுடரான பிளிச்சிங்பவுடர் அவசியம் பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதியும், நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை – 28 அவர்களின் கடித ந.க.எண்.10608/2021/எச்1 நாள்.10.11.2021 – நாளிட்ட கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட விலைக்குட்பட்டு பிளிச்சிங் பவுடர் ரூ.8,80,000/– க்குள் திருச்செங்கோடு வேளாண்மை

பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட், திருச்செங்கோடு என்ற அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனம் மூலம் அவ்வப்போது தேவைக்கேற்றவாறு கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வெள்ள பாதிப்பு நிவாரண பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்க்கொள்ளும் பொருட்டு பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் **ரூ.8,80,000/–**க்கு அவ்வப்பொழுது தேவைக்கு ஏற்றவாறு M/s. திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் திருச்செங்கோடு என்ற அரசு சார்ந்த கூட்டுறவு மையத்தில் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**526/2022**/எச்**1**

**தீர்மான எண்.193 நாள். 30.08.2022**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் எண்: TN -34-D-4081 காப்பீடு வருகின்ற **31.08.2022** அன்று புதன்கிழமை வரை காப்பீடு முடிவடைகிறது. எனவே காப்பீட்டை புதுப்பிக்க நேஷனல் காப்பீடு நிறுவனம் **ரூ.11535.00–**ஐ செலுத்தியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்க்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1381/2021/இ1

**தீர்மான எண்.194 நாள். 30.08.2022**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டு பகுதிக்கும் அக்ரஹாரம் நீரேற்று நிலையத்தில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீரானது வழங்கப்பட்டு வருகிறது. சமயசங்கிலி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் நீரை நன்கு சுத்திகரிக்கப்பட்டு சிறந்த முறையில் குளோரினேசன் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குளோரினேசன் செய்ய கேஸ் குளோரினேசன் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் குளோரினேசன் சிலிண்டர் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கான ஒப்பந்தப்புள்ளியானது முடிவடையும் நிலையில் உள்ளதால் குடிநீர் அவசியம் கருதி அதனை தடையின்றி பெற்று பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது அவசியம். தற்போது 900Kg அளவுள்ள சிலிண்டரானது 25 நாட்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் வரும் காலத்தில் சிலிண்டர்கள் கொள்முதல் செய்வதற்கு ஒரு ஆண்டுக்கு தேவையான 15 எண்ணம் சிலிண்டர் தேவைப்படுகிறது. அதன் விலைப்புள்ளியில் ஒரு சிலிண்டர் விலை GST உட்பட ரூ.20296/— தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 15 எண்ணம் சிலிண்டர் கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,05,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1426/2021/இ1

**தீர்மான எண்.195 நாள். 30.08.2022**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

பள்ளிபாளையம் நகராட்சியின் பொதுநிதி திட்டம் 2022-2023 ன் கீழ்கண்ட வேலை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 18.08.2022 — ம் தேதி வியாழக்கிழமை அன்று கீழ்கண்டவாறு

இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பொதுநிதி திட்டம் (General Fund)2022-23 பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை தற்காலிக கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு ஏற்படுத்தி சுத்தம் செய்யும் பணி | 3,50,000/- | ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ், 344,சுடமுத்தான்பட்டி, சிங்கம்பேட்டை, பவானி | 0.18% குறைவு |
| | | | கே.எஸ்.மாரியப்பன், 716பி, குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 1.82% அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் **0.18%** குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்த ஒப்பந்ததாரர், ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டுத் தொகையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக உள்ளதால் மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1288 /2022/இ1

**தீர்மான எண்.196 நாள். 30.08.2022**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

பள்ளிபாளையம் நகராட்சியின் பொதுநிதி திட்டம் 2022-2023 ன் கீழ்கண்ட வேலை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 18.08.2022 – ம் தேதி வியாழக்கிழமை அன்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் நிதி திட்டம் (Water Supply Fund) 2022-23 தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 60 எச்.பி மின் மோட்டாரின் பம்பில் அவ்வப்போது ஏற்படும் அடைப்புகளை நீக்கும் பணி | 1,20,000/- | எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.01% குறைவு |
| | | | ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ், 344,சுடமுத்தான்பட்டி, சிங்கம்பேட்டை, பவானி | 0.58% அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்த ஒப்பந்ததாரர், எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டுத் தொகையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக உள்ளதால் மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1272 /2022/இ1

**தீர்மான எண்.197 நாள். 30.08.2022**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 ஆர்.எஸ் ரோடு குறுக்குச்சாலை அறிவு திருக்கோவில் தெருவில் புதிய தெருவிளக்குகள் அமைக்க நகர்மன்ற உறுப்பினர் நகர்மன்றத்தலைவர் வாயிலாக தெரிவித்ததின் பேரில் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இதில் புதியதாக 4 மின்கம்பங்களுக்கு புதிய தெருவிளக்கு அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் நகர் பிரிவிற்கு விண்ணப்ப கட்டணம் ரூ.1375/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.898/2021/இ1

**தீர்மான எண்.198 நாள். 30.08.2022**

அங்கீகரிக்கப்பட்டது.